**DEPOSITION OF WITNESS**

IN THE COURT OF : Judicial Magistrate, Thuraiyur.
Case No. : CC.75 of 2021
Prosecution Witness : PW5

10.02.2026

| | | | |
|---|---|---|---|
| Name | : ராஜு | Calling | : கூலிவேலை |
| Father Name | : சிவனடியான் | | : |
| Village | : காருகுடி | Age | : 65 |
| Taluk | : துறையூர் | | |

**சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.**

1 வது எதிரி ஆஜர். 2 வது எதிரி ஆஜரில்லை. வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் காருகுடியில் குடியிருந்து கூலிவேலை செய்து வருகிறேன். அ.சா.1 முதல் அ.சா.3 சாட்சிகளை தெரியும். ஆஜர் 1 வது எதிரியை தெரியும். 2 வது எதிரியையும் தெரியும். அ.சா.1 ற்கும், எதிரிகளுக்கும் என்ன பிரச்சினை என்று தெரியாது. சம்பவம் பற்றி நேரடியாக தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி அரசு தரப்பை ஆதரிக்காததால் சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவிக்ககோரி அரசு தரப்பில் அனுமதி கோரப்பட்டு அனுமதி அளிக்கப்பட்டது.**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

போலிசார் விசாரணையின் போது 28.10.2020 ம் தேதி 02.30 மணியளவில் அ.சா.1 முதல் அ.சா.3 நபர்கள் ஆஜர் எதிரியை வயல் வரப்பு வழியாக நடந்து சென்றபோது ஆஜர் எதிரி அசிங்கமாக திட்டியதாகவும், கொலை மிரட்டல் விடுத்ததாகவும், சம்பவத்தை நேரில் பார்த்ததாகவும் போலிசார் விசாணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. தற்போது உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை** – இல்லை

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

ஒப்பம்/–அ.நர்மதாராணி,
நீதித்துறை நடுவர், துறையூர்